சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி– நெடுஞ்சாலைத் துறை – கருணையடிப்படைப் பணி நியமனம் – காலஞ்சென்ற சாலை ஆய்வாளர் திரு.எஸ்.ஜெயபால் என்பவரின் மகள் திருமதி.ஜெ.தேவி, இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – விதிகளைத் தளர்த்தி பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை**

**அரசாணை (2ப) எண். 25** **நாள்: 28.09.2022**

**சுபகிருது, புரட்டாசி 11, திருவள்ளுவர் ஆண்டு 2053.**

**படிக்கவும்:–**

1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 26.02.2021.
3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை கடித எண்.64292/நிர்.1(2)/2000, நாள் 08.07.2021 மற்றும் 29.11.2021.

----------

**ஆணை:–**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அவர்கள் நெடுஞ்சாலைத்துறையில் ஒரத்தநாடு (நெ) உட்கோட்ட அலுவலகத்தில் சாலை ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.எஸ்.ஜெயபால் என்பவர் 10.11.2001 அன்று பணியிடையே காலமானார் எனவும், அவரது பணி சாலை ஆய்வாளர் பணியிடத்தில் 01.01.1977 முதல் நிரந்தர நிறுவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் அவரது மகள் திருமதி.ஜெ.தேவி அவர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக் கோரி அளித்த விண்ணப்பம் உரிய வழிமுறையில் பெறப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 05.08.2019 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார் எனவும், அவர் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளதாகவும், பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளிக்கும் நாளில் தனியரின் வயது 22 வருடம் 11 மாதங்கள் நிரம்பப் பெற்றுள்ளதாகவும் தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாகவும் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் தனியரது வயது கல்வித்தகுதி மற்றும் தேவைப்படும் அனைத்து சான்றிதழ் அசலாக சமர்ப்பித்துள்ளார். எனவே கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யட்ட திருமதி.ஜெ.தேவி என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 05.08.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் வரன்முறை செய்வதற்கு அரசின் ஆணையினைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் செயற் குறிப்பை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நெடுஞ்சாலைத்துறையில் கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி.ஜெ.தேவி என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 05.08.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக தனியருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பிக்கும் நாளில் திருமணமாகாமல், ஆனால் பணிநியமனத்திற்கு முன்னர் திருமணமாகியுள்ளதால் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 15 மற்றும் பணப்பலன்களை பணிநியமன நாளிலிருந்து வழங்க மேற்படி சட்டத்தின் பிரிவு 28(2) ஆகியவற்றை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58-இன் கீழ் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி தனியர் பொருட்டு தளர்த்தி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இந்த அரசாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.15971/க்யூ1/2022-1, நாள்:15.09.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.3176618/ஜி1/2022, நாள்:20.09.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25.
திருமதி.ஜெ.தேவி, இளநிலை உதவியாளர் (நெ).
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை-25. வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை-600018.

**நகல்:-**
மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணிகள்- கட்டிடங்கள், நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள்) அவர்களின் அலுவலகம், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலாளர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை-9.
அரசு துணைச் செயலாளரின் நேர்முக எழுத்தர், நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை-9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,சென்னை-9.
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.
(கோ.எண்.8196/எச்.எம்.1/2021)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

கோட்டப் பொறியாளர் (நெ),
க க ப. தஞ்சாவூர்.